# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2280/30 - 2022 මැයි මස 18 වැනි බදාදා - 2022.05.18

2280/30 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. - 94/47 (viii)

**நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 269)**

**6 (2) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை**

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 (2) (ஆ) என்னும் பிரிவாலும், 21 (2) (ஆ) என்னும் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இக்கட்டளையின் மூலம் -

(அ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்கு இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டுமென்பதுடன் “மெதகம நிகஸலாநுவர மஹாகிறி சேதியாராம ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பு” என அழைக்கப்படுதலும் வேண்டும் எனவும் வெளிப்படுத்துகின்றேன்;

(ஆ) “மெதகம நிகஸலாநுவர மஹாகிறி சேதியாராம ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பு” ஆக வெளிப்படுத்தப்பட்ட காணியின் முழு இடப்பரப்பு தொடர்பிலும் உருவரை பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ (பா. உ.),**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2022, ஏப்பிறல் 26.


1A - G 36789 — 16 (2022/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

**மெதகம நிகஸலாநுவர மஹாகிறி சேதியாராம ரஜமஹா விகாரை புனித இடப்பரப்புப் பிரதேசத்தைக் கொண்டிருக்கும் காணியின் இடப்பரப்பு**

*வடமேல் மாகாணத்தின் குருநாகல் நிருவாக மாவட்டத்தின் படுவஸ்நுவர பிரதேச செயலாளர் பிரிவில் 1375 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிலுள்ள மடகம கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020. யூன் 29 ஆந் திகதிய* KU/PDE/2020/70 *ஆம் இலக்க நிலவரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டு* E *மற்றும்* F *எனவழைக்கப்படும் அக்காணி இடப்பரப்பு அடங்கலும், அவற்றின் எல்லைகள் பின்வருமாறு* :-

**காணித்துண்டு : E**
*வடக்கில்* : F.V.P. *2233 இலுள்ள காணித்துண்டு இல. 113*
*கிழக்கில்* : F.V.P. *2233 இலுள்ள காணித்துண்டு* H *மற்றும் காணித்துண்டு இலக்கங்கள் 123, 124, 126, 128, 158* D *மற்றும் 181*
*தெற்கில்* : F.V.P. *2233 இலுள்ள காணித்துண்டு இலக்கங்கள் 123, 181 மற்றும் கண்டுபோடகம (* F.V.P. *2232)*
*மேற்கில்* : *கண்டுபோடகம கிராமம் (* F.V.P. *1695)*

**காணித்துண்டு : F**
*வடக்கில்* : *இச்சுவட்டில் உள்ள காணித்துண்டு இல.* F *மற்றும் காணித்துண்டு இல. 113 இலுள்ள* F.V.P. *2233*
*கிழக்கில்* : F.V.P. *2233 இலுள்ள காணித்துண்டு இல. 113*
*தெற்கில்* : *இச்சுவட்டில் உள்ள காணித்துண்டு* E
*மேற்கில்* : *இச்சுவட்டில் உள்ள காணித்துண்டு இல* E

EOG *05 - 0088/1*

---

*ச. வ. பி. - 94/47* (v)

***(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத்திட்டமிடல் கட்டளைச்சட்டம்***

***6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை***

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 (2) (ஆ) என்னும் பிரிவாலும், 21 (2) (ஆ) என்னும் பிரிவாலும், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இக்கட்டளையின் மூலம் -*

*(அ)* *இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "கிரிஉல்ல மத்தேபொல ரஜ மகா விகாரை புனித இடப்பரப்பு" என அழைக்கப்படும் காணி இடப்பரப்பானது. மேற் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; மற்றும்.*

*(ஆ)* *நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட வேண்டிய "கிரிஉல்ல" மத்தேபொல ரஜ மகா விகாரை புனித இடப்பரப்புக்கான" உருவரை பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்படல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.*

***மஹிந்த ராஜபக்ஷ (பா. உ.),***
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2022, ஏப்பிறல் 26.*

**அட்டவணை**

**கிரிஉல்ல மத்தேபொல ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு**

*வடமேல் மாகாணத்தின் குருநாகல் நிருவாக மாவட்டத்தில் மடபத்து கிழக்கு கோரளே சிறு பிரிவில் பன்னல பிரதேச செயலாளர் பிரிவினுள் இல. 1568 - சியம்பலாவலன கிராம அலுவலர் பிரிவில் சியம்பலாவலன கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டு இல. 124 (0.5009 ஹெக்டெயர்கள்), இல. 1565 - மல்கமுவ கிராம அலுவலர் பிரிவில் மல்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டு இல. 127 (15.6059 ஹெக்டேயர்கள்) மற்றும் இல. 1569 - பத்தேபொல கிராம அலுவலர் பிரிவில் மத்தேபொல கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டு இல. 386 (10.4523 ஹெக்டேயர்கள்) ஆகியவற்றை உள்ளடக்கியதும், பரப்பளவில் 26.56 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதும், நில அளவையாளர் தலைமையதிபதியின் 2018 செத்தெம்பர் 7 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டு இல. Ku/PNN/2017/039 எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறானதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறாகும் :-*

**காணித்துண்டு இல 124 - கல்பெம்மலங்கஹஹேன**
*வடக்கு : காணித்துண்டு இல. 26 மற்றும் எவ். வீ. பி. 386*
*கிழக்கு : எவ். வீ. பி. 386 மற்றும் எவ். வீ. பி. 381*
*தெற்கு : வீதி*
*மேற்கு : வீதி மற்றும் காணித்துண்டு இல. 26*

**காணித்துண்டு இல 127 - கொங்கொல்ல தோட்டம், சிறிஉல்லேகடமண்டிய, ஹொரகஸ்யாய முகலான**
*வடக்கு : எவ். வீ. பி. 386*
*கிழக்கு : வீதி (பிரதேச சபை)*
*தெற்கு : காணித்துண்டு இல. 3 மற்றும் காணித்துண்டு இல. 4*
*மேற்கு : காணித்துண்டு இல. 4 மற்றும் எவ். வீ. பி. 374*

**காணித்துண்டு இல 386 - புளுகஹமுலவத்த, கொங்கஹமுலவத்த, விஹாரகந்தகெல, விஹாரகந்த**
*வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 8, 10, 11ஏ, 11பீ, 12ஏ, 14பீ மற்றும் 15*
*கிழக்கு : காணித்துண்டு இல. 12 மற்றும் வீதி*
*தெற்கு : எவ். வீ. பி. 381 மற்றும் எவ். வீ. பி. 374*
*மேற்கு : வீதி*

EOG 05 - 0088/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.